## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.24/2023** **நாள் : 27.03.2023**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிக்குட்பட்ட ஆலந்தூர் மண்டலம், நந்தம்பாக்கம் பகுதியில் ரூ.26.94 கோடி மதிப்பீட்டிலான பாதாள சாக்கடை அமைக்கும் திட்டப் பணிகளை மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று (27.03.2023) தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் ரூ.26.94 கோடி மதிப்பீட்டில் ஆலந்தூர் மண்டலம், வார்டு எண்.158க்குட்பட்ட நந்தம்பாக்கம் பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டப் பணிகளை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்களின் முன்னிலையில் இன்று (27.03.2023) அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

**பின்னர் மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது :**

ரூ.26.94 கோடி மதிப்பீட்டில் ஆலந்தூர் மண்டலம் வார்டு எண்.158-ல் உள்ள நந்தம்பாக்கம் பகுதியில் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை திட்டப் பணிகளின் மூலம் நந்தம்பாக்கம் பகுதியைச் சார்ந்த 82 தெருக்களில் உள்ள 1,220 வீடுகளுக்கு கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்படும். இதன் மூலம், 20 ஆயிரம் மக்கள் பயன் பெறுவார்கள். இப்பணிகள், நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சி முழுவதும் பல்வேறு இடங்களில் குடிநீர் திட்டப் பணிகள் மற்றும் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தப் பணிகள் அனைத்தும் உரிய காலத்திற்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

.......2.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ் குமார், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.இரா.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., செயல் இயக்குநர் திரு.ராஜ கோபால் சுன்கரா, இ.ஆ.ப., ஆலந்தூர் மண்டல குழுத் தலைவர் திரு.என்.சந்திரன், மாமன்ற உறுப்பினர் திருமதி.ஜி.கே.பாரதி, சென்னை குடிநீர் வாரிய தலைமைப் பொறியாளர் திரு.ஆ.மலைச்சாமி, மேற்பார்வைப் பொறியாளர் திருமதி.வெ.திலகவதி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,**
**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்**
**கழிவுநீரகற்று வாரியம்**